## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS. 567/2019** Plaintiff :

Deposition of Witness of Defendant: DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. பகவதி | District | : | |
| Father/ Husband name | : | திரு. மாதவன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 04.04.2025

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி மற்றும் 3,4ம் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. தாவா சொத்திற்கு குஞ்சரம்மாள் பெயரிலுள்ள 296ம் நம்பர் அ - பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 (வாதி தரப்பில் மேற்படி ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் உண்மை நகல் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

2. 23.09.2019ம் தேதியிட்ட சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் 2ம் பிரதிவாதி மற்றும் 1ம் வாதி ஆகியோர்கள் மீது 1ம் பிரதிவாதி கொடுத்த புகார் மனுவிற்கான ஏற்பு சான்றிதழ் அசல் பி.வா.சா.ஆ.2

3. மாதவன் இறப்புச் சான்று நகல் பி.வா.சா.ஆ.3 (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது)

4. 1ம் பிரதிவாதி மாதவனின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.4 (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது)

5. 1ம் பிரதிவாதி மாதவனின் வாரிசு சான்று கணினி நகல் பி.வா.சா.ஆ.5

6. 3ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.6 (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது)

7. 4ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.7 (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது)

8. தாவா சொத்திற்கான புலப்படம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.8 (வாதி தரப்பில் மேற்படி ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் உண்மை நகல் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

9. 3ம் பிரதிவாதி, 2ம் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பி.வா.சா.ஆ.9

10. வழக்கறிஞர் அறிவிப்பை 2ம் வாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் கவல் அசல் பி.வா.சா.ஆ.10

தாவா வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணைக்கு கால அவகாசம் கோரி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.04.04 13:56:26 +0530